# அடிகளார் இனிது வாழ்க

எம் தமிழ் அறிஞர் போற்றும்
இயல் இசை நாடகங்கள்
அம்புவி யெலாம் பரந்து
அரங்கினுக் கழகு செய்ய
தம்முடை யாவி யாவும்
தருபவர் ஒருவர், அன்னார்
எம்கலைக் கோமான் சவிரி
அடிகளார், நீடு வாழ்க

கலைத்துறைக் கடலில் மூழ்கி
கவினுறு முத்தெ டுத்து
நிலைத்தொளி வீச மாரம்
நித்தமும் தொடுக்கும் சிற்பி
மலைமிசைத் தீப மென்ன
வானத்து நிலவை யொப்ப
இசை படைத் தெம்முள் வாழும்
யேசுவிற் கடியார் வாழ்க

திருமறைக் கலா மன்றத்தின்
சிற்பியாய், கலைவ ளர்க்கும்
அருமந்த கலைஞர்க் கெல்லாம்
ஆதார சுருதி யாய்த்தன்
கருமத்தால் கலைஞர் நெஞ்சில்
கடவுளாய் இனிது வாழும்
பெருமைக்கோர் பீடம், சவிரி
அடிகளார் இனிது வாழ்க

பன்மொழிப் புலவர், நூல்கள்
படைத்தவர் மரபு கூறும்
தொன்மையும், நவீனம் சாற்றும்
துறைகளும் தோய்ந்த செம்மல்
நன்மொழி யன்றி வேறு
நவின்றிடார், கலைத்தா தோதும்
மன்னவர் சவிரி முத்து
மாதவர் பல்லாண்டு வாழ்க.

கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை



# ஈழத்து அண்மைக்கால மரபுவழிப் பிரபந்தங்கள்
## ஒரு சமுதாயப் பார்வை

ஒவ்வொரு காலகட்டத்து இலக்கியமும் தான் தோற்றம் பெற்ற காலத்தை, அங்கு வாழும் மக்களை, அவர்களது சமூகச் சூழலைப் பிரதிபலிப்பதாகவே பெரும்பாலும் அமையும். அவ்விலக்கியம் சுட்டும் பொருள் எதுவாயினும், அதனது சமூகம், அங்கே இழையோடும்.

மரபுவழிப் பிரபந்தங்களை, இவ்வடிப்படையில் வைத்துப் பார்க்கும்போது, இவ்விலக்கியங்கள் கூட, தம் காலத்துச் சமூகத்தை மையப்படுத்தியுள்ளன. இல்லாவிடின், ஒரு சில சந்தர்ப்பங்களிலேனும், சமூகச் செயற்பாடு பற்றிக் குறிப்பிட்டுள்ளன. மரபு வழிப் பிரபந்தங்கள், தமிழ் இலக்கிய வரலாற்றில், இறைவன், அரசன், தலைவன், குரு ஆகியோரில் ஒருவரைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு ஆக்கப்பட்டவையாகவுள்ளன. இவை உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், ஊஞ்சல், தூது, அம்மானை, பதிகம், புராணம் எனப் பல்வேறு வடிவங்களிலமைகின்றன. இதே தன்மையில் தான் அண்மைக்காலம் வரை இயற்றப்பட்டு வந்த மரபுவழிப் பிரபந்தங்கள் காணப்படுகின்றன. ஆயினும் இறைவன் புகழையே அநேக இலக்கியங்கள் சுட்டுகின்றன.

இறைபுகழ் கூறும் இவ்விலக்கியங்கள் சமூகத்தை மையப்படுத்துகின்ற போது, அங்கு நிலவுகின்ற பல்வேறு பிரச்சனைகளையே முக்கியப் படுத்துகின்றன. ஈழத்து அண்மைக்காலப் பிரபந்தங்களெனும் வகையில், "நாக இராச இராசேஸ்வரி சதகம்," "காதலி யாற்றுப்படை," "புதிய வண்டு விடு தூது," தந்தையார் பதிற்றுப்பத்து' என்பன குறிப்பிடத் தக்கனவாகும். இவற்றில் ஒருசிலவே சமூகத்தைச் சித்திரிக்கின்றன. இதன் காரணமாக இவ்விலக்கியங்களின் பாடுபொருளைப் பின்வருமாறு பாகுபடுத்திக் கொள்ளலாம்.

இறைதுதி பாடுவன.

சமூகத்தைப் பாடுவன.

இறைதுதியூடாகச் சமூகத்தைக் கூறுவன.

நடைமுறை வாழ்க்கையின் பல்வேறு கோணங்களையும் அலசும் இவ்விலக்கியங்களின் சமுதாயத்தின் நலன்களைக் குறைபாடுகளைச் சித்தரிப்பதனூடாக, ஒரு சமுதாயம் இவ்வாறுதான் அமைய வேண்டுமென்ற வரையறையைத் தருகின்றன.

மக்களது விழுமியங்களை, பொதுவான அம்சங்களைச் சமுதாயம் பேணிக் கொண்டிருக்கின்றது. இதனால் மனிதன் சமூகத்தோடு இணைந்து வாழ்வது தவிர்க்கப்பட முடியாததாகின்றது. இங்கு உறவு பேணப்படுகின்றது. வாழ்வு நிலைபெறுகின்றது. மனித நடவடிக்கைகள் விமர்சனம் செய்யப்படுகின்றன. மனிதன் தனக்கெனவும் சில பண்புகளையும் இச் சந்தர்ப்பத்தில் உள்வாங்கிக் கொள்கின்றான்.

குறிப்பிட்ட பிரதேசத்தின் புறச்சூழல், மக்களுடைய வாழ்க்கைமுறை, அவர்களது குணநலன்கள் என்பன தனியொருவனில் தாக்கங்களை உண்டுபண்ணுகின்றன. அத்துடன் பிரதேசத்தின் இயற்கையமைப்பும், தட்ப வெப்பமும், மனித வாழ்க்கையை மாற்றி விடுகின்றன. சில சமயங்களில் சமூக இறுக்கங்கள், வன்முறையை/குரோத மனப்பான்மையை/குற்றச் சாட்டை/பழிவாங்கலை ஏற்படுத்தி விடுகின்றன.

இவையனைத்தும், சமூகத்தையுணர்ந்த இலக்கிய கர்த்தாவிற்குப் பாடுபொருளாக அமைகின்றன. அத்துடன் மக்களது மொழி, கலை, பழக்கவழக்கங்கள், உரையாடல்கள் என்பவற்றையும் இவன் மதித்துக் கொள்கின்றான். இவையே வரலாற்றுப் பதிவுகளாக இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றன.

கவிஞர் மு. செல்லையாவினால் ஆக்கப்பட்ட "புதிய வண்டு விடுதூது" புதியபாணியில் அமைந்தவொரு இலக்கியம். ஆரம்ப காலங்களில் தூது என்பது, ஒரு அரசன் இன்னொரு அரசனுக்கு அரசியல் சம்பந்தமான விடயங்களைக் கூறுவதற்கு ஒருவனை

அனுப்பிவைப்பான். அதுவே தூது எனவாயிற்று, இந் நிலைமை இலக்கியங்களில் பதியப்படுகின்றபோது, காதலன் காதலிக்கும், ஆன்மா இறைவனுக்கும் சிஷ் யன் குருவிற்கும் தூது அனுப்பும் தூது வடிவம் உருப்பெற்றது. தூதுப் பொருட்களாக, கிளி, நாரை, அன்னம், தென்றல் எனப் பொருட்கள் அமைந்த வரிசையில் செல்லையா வண்டைக் காதலிக்குத் தூதாக அனுப்புகிறார்.

"ஆஹா மறிவின் விளைவாலுலக மதிசயிக்க
வேறாம் மதிசெய்து விண்ணிடைப் போக்கு
விஞ்ஞானிகளுந்
தேறாத வித்தையிற் றேர்ந்து மலரிடைத்
தேன்திரட்டும்
பேறார் கருவண்டு கேளாய் நினக்கொன்று
பேசுவனே"

சென்னையில் தொழில் பார்க்கும் கணவன், விமா னத்தின் மூலம் பலாலி வரும் வண்டு, நல்லூர், அனுராதபுரம், பேராதனை வழியாகக் கொழும்பு செல்லுமாறு கூறுகின்றார். இங்கு ஒவ்வொரு பிரதேசப் பண்புகளையும் அவதானிக்கலாம். மனைவிபற்றி அவர் கூறும் விபரிப்பு, அக்கால நாகரீக மோகத்தை நையா ண்டி செய்வதாக அமைகின்றது.

சுளகை முறுக்கினைச் சும்மாடு தன்னைத்
துடைப்பமதைப்
பழகு மிடியப்பத் தட்டை, நிகர்க்கப்
பலவிதமாய்
அழகு பெறக் கொண்டை வைத்தே
அவைதிற மல்லவென்று
குழகுறு கூந்தலைக் கத்தரித்தாள் தலைக்
கோலமிதே."
கண்மை, முகமா, இதழ்ச்சாயம், சென்னிக்
கருமயிர்க்கு
வண்மைக்குழம்பு, நகப்பூச்சுப் பற்பசை
வாசமொடு
தண்மை தருஞ் "சென்ரு" கொங்கைக்குக்
கூர்தரும் கச்சி
பெண்மைக் குறுதுணை யென்று
கொள்வாளென்தன் பேரணங்கே."

இந்நூல், ஒரு காலச்சமூகப் பதிவாக அம்மந்து விடுவதனால் சமுதாய மாற்றஙகளை ஒப்பீடு செய் வதற்கும் துணையாகின்றன.

பல்லவர்காலப் பகுதியிலே, சமணர்கள், பௌத்தர் களிடமிருந்து தங்கள் மதத்தை வேறுபடுத்தி நோக்கு வதற்கு, மக்களுக்கு மதவுணர்வை ஏற்படுத்துவதற்கு நாயன்மார் "தமிழ் உணர்வை" கருவியாகக் கொண்டார்கள். இதன் தொடர்ச்சியே. இன்றும் பக்தி சார்ந்த இலக்கியங்களில் தமிழ் உணர்வு பிரதி பலிக்கப்படுவதாக அமைகின்றது.

"கொஞ்சு தமிழ் பாடியநள் கொண்ட குளிர்
நாவலவ
கொட்டியநள் சப்பாணியே"

எனும் 'சுந்தர் பிள்ளைத்தமிழ்' இலக்கியப்பாடல் இதற்குச்சான்றாகும். திருவூஞ்சல் பாடலொன்று இறைவனை வாழ்த்தும் போது,

"பொன்ராம நாதவள்ளல் உனைப் பூஜிக்கப்
பொலிந்திடவே செந்தமிழ் சைவம் சீலம்
நன்றாக வளர்ந்திடவே ஆசி தந்தாய்"

எனக் கூறப்படுகின்றது. யாழ் பல்கலைக்கழக வளவினுள் அமைந்திருக்கும் பரமேஸ்வரன் கோயில் மீது பாடப்பட்ட இப்பாடலில், அக்கோயில் உருவாக் கத்திற்குக் காரணமாக அமைந்த "சேர்பொன் இராமநாதன்" பற்றிய குறிப்பு, அவரது பணியைச் சிந்திக்க வைப்பதாக அமைகின்றது.

வீரகத்தியின் கருகம்பனையூர் நாகஇராசஇரா சேஸ்வரிசதகம் மனிதத்தை முன்னிலைப் படுத்து கின்றது. மனிதம் மகத்தான பொக்கிஷம் அது இல்லையெனில் மனிதன் வாழ்வதில் அர்த்தமில்லை.

"என்னால் பிறர்க்கும் பிறரால் எனக்கும்
சின்னொரு தீமையும் சேரா திருக்கவும்
பிறரால் எனக்கும் என்னால் பிறர்க்கும்
தினையள வேனும் திருமை சேரவும்
அவதி அற்றும் உவகை உற்றும்
மல்லிகை முல்லைபோல் மக்கள் மலரவும்
அவள் அருள் வேண்டி அவள்பதம் பரவி"

எனப்பாடல் அமையும்போது, அவர் நேசிக்கும் மனிதத்தை நாம் உணர்கின்றோம். இந்நோக்கே இலக் கியங்களுக்குச் சிறப்பைத் தரும். பாடுவது இயற்கை யாக அமையலாம்: சமயமாக அமையலாம்: ஆனால் சமூதாய அக்கறையோடு அவற்றை அணுகுவது இலக்கிய கர்த்தாவிற்கு அவசியமாகின்றது.

தான் காண விழைகின்ற சமுதாயமொன்றை அகக் கண்ணிலே காணுகின்ற இலக்கிய கர்த்தா, அதனைத் தன் சமூகத்தில் உள்ளதாக எடுத்துக் கூறும் தன்மையும் இரசனைக்குரியது. கம்பனிடம் இத் தன்மையைக் காணலாம்.

"வண்மை இல்லை, ஓர் வறுமை
இன்மையால்" எனப் பாடுவது போல வீரகத்தியும்
"மோதலும் இல்லை முனகலும் இல்லை முது வினையின் ஏதங்கள் சற்றும் வெதும்பலும் இல்லை

விதி புதிதே".

எனத் தன் சமுதாயத்தைக் காண்கின்றார். மேற் குறிப்பிட்ட பிரச்சினைகள் தான் மனித முரண் பாடுக ளுக்குக் காரணிகளாக அமைகின்றன. இவை யொழிந் தால் மனிதம் நிலைபெறும் என்கின்ற நம்பிக்கை இவருக்கிருந்திருக்கின்றது.

இராச இராசேஸ்வரி இறைவியிடம், ஆசிரியர் வேண்டுகின்ற போது, மனிதர்களை நல்வழிப் படுத் துமாறு உரைக்கின்றார். மனிதர்களிடம் தான் நேரடி யாகக் கூறாமல், ஏன் இறைவியிடம் விண்ணப் பிக்கின் றாரென்பது சிந்திக்கத்தக்கது. இலக்கியமோ, அறிவு ரையோ பண்படுத்தாத மனிதர்களைத் தாயே நீ பண்படுத்து என ஆசிரியர் சிந்தித்தார் போலுமென நாம் அமைதி கொள்ளலாம். இவ்விதமாகவே, நீ.மரிய சேவியர் அடிகள் ஆக்கிய கல்வாரிப்பரணி என்னும், நூலில் ஒரு பாடலில் இறைவனிடம் கேள்வியின் மூலம் இறைஞ்சிக் கேட்டது நயம் உடைத்து!

"நன்மை செய்வதும் கெடுதியோ அற
வண்மை வெல்வது உறுதியோ?
பன்மை சேர்முகத் தீமைமுன் இறைத்
தன்மை உலகினில் உளமையோ?"

நம் நாட்டு அரசியல் பிரச்சினை, இனப் பிரச்சினையாக வடிவெடுத்துத் தமிழினத்தைத்திட் டமிட்டு அழிக்கின்ற காலத்தில், வாடிய பயிர்களாகத் தமிழர், வானம் பார்த்த பயிர்களாக, கைதர யார் வருவாரென ஏங்கிய சூழலில் பின்வரும் பாடல் அமை கின்றது.

"சீர்காழிக் கன்றுக்கு ஞானப்பால் ஊட்டிய
சீமாட்டியோ
கார்காலம் அற்ற நம் பயிர்களைக் கைவிடுவாள்"

பாடல்கள் பலவற்றில் எமது நாட்டுப் பிரச்சனை கூறப்பட்டாலும், இறைபக்திப் பிரபந்தத்தில் இப்பிரச்சினை சுட்டப்படுவது புதிய அம்சமேயாகும். இதேசமயம் சமுதாயத்துரோகிகளை/ புல்லுருவி களைச் சாடுகின்ற ஆசிரியர், ஒரு மனிதன் எவ்வாறு வாழவேண்டு மென்பதையும் தன் நூலிலே குறிப்பிட் டுள்ளார்.

யாழ்ப்பாணச் சமூக அமைப்பில், .பெண்கள் பிரச் சினை, முக்கிய பிரச்சனையாக வந்தமைகின்றது. சீதனமும் சமூக இறுக்கங்களும் அவளை நல்ல முறையில், சுதந்திர உணர்வுடன் வாழவிடவில்லை இதனை,

"பாரிய நூல்கள் பலப்பல கற்பினும் ஆண்
தகைமைச்
சீரியல் குன்றிய சீதனம் கேட்கும் நபுஞ்சகரை
வாரிய கூந்தல் வனிதையர் உள்ளம்
வருத்துவரை
நேரிய உன்வாள் பசிக்கிரை தேடும்
நிலையருளே"

எனும் பாடல் விபரிக்கும்.

யாழ்ப்பாணச் சமூகத்தில், ஆலயங்கள் தோறும், பூசைகளும், புனர்நிர்மாணமும் நடை பெறும் சூழலில், பூசகர்கள் இறைவனுக்கும் அடியவர்களுக்கும் இடை யில் தூதுவராகச் செயற்படுகின்றனர். இதனை வெறுக்கும் ஆசிரியர்,

"எனக்கும் உனக்கும் தரகர் ஒருவர் இடையில்
நின்று
மனச்சுமை தீர்ந்திட மந்திரம் சொல்லி
மலர்சொரியும்
மினக்கெடு வேண்டன் யான்"

என்கின்றார்.

பெண்கள் அம்மானை விளையாடும் போது பாடுகின்ற பாடலின் தன்மையில் அமைந்தது சூசை யப்பர் அம்மானையாகும். இங்கு சூசையப்பரின் வாழ்வுச் சரிதம் கூறப்படுகின்ற அதே வேளை, மனிதனின் வாழ்க்கைத் தத்துவங்களும் கூறப் படுகின்றன. மனிதன் இப்படித்தான் வாழவேண்டு மென்பதனையும் இப்படி வாழாவிடின் ஏற்படும் துயரங்களையும் ஆசிரியர் விபரித்துள்ளார்.

"காமமொடு கடும் வெகுளி களிமயக்கப்
போரினிலே
நாமவேல் தனையேந்தி எதிர்த்திடுவோன்
நாடிழப்பான்"

என அச்சுறுத்துகின்ற ஆசிரியர். இன்னொரு சந்தர்ப்பத்தில் வறுமையின் கொடுமைகயைக் கூறு வதுடன்,வறுமையைப் போக்க உதவாத மனங் களை யும் வெறுத்துரைக்கின்றார்.

"ஏழ்மைமிகும் எளியவர்கள் இல்லிடம்
இல்லாதோர்
கூழுணவு கந்தைபெறக் கும்பிட்டே
நின்றிடுவோர்
வாழவழி காட்டாதோர் வளர்த்துவரும்
செல்வம் பாழடைந்தே வீணாகும்"

இதேசமயம் நாட்டில் நடக்கும் ஊழல்கள், இலஞ் சங்கள் என்பவற்றையும் கண்டித்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

நாவலர் வெண்பா சமுதாயத்தின் இன்னொரு பரிமாணத்தை எமக்கு உணர்த்துகின்றது. நாவலரது பணிகள் சமயப்பணி, சமூகப்பணிகளாக விளங்கிய மையால் அவர் சம்பந்தமான பாடல்கள் யாழ்ப்பாண

சமூகத்தின் ஒரு காலகட்டத்தை எமக்குத் தெளிவு படுத்துகின்றன. "நாவலர் கீதம்" எனும் நூல் யாழ்ப்பாணச் சமூகத்தின் சமூக பொருளாதாரங்களை வகைப்படுத்தித் தருவதுடன் மக்களது அநாகரிகச் செயற்பாடுகளையும் கண்டிக்கின்றது.

எனவே இப் பிரபந்தங்களின் சிறப்பு என்னவெனில், யாழ்ப்பாணத்தின் அரசியல் வரலாறும், சமூக வரலாறும் இவற்றினூடாகப் பதிவு செய்யப்படும் வகையில் இவை ஆக்கப்பட்டுள்ளன. பாடுபொருள் பக்தி, இறைவன் என இருந்தபோதும், அங்கு சமூகம் விபரிக்கப்படுகின்றது. அதனூடாக மனிதம் முன்னிலைப்படுத்தியுரைக்கப்பட்டது. அடுத்ததாகப் பழைய மரபுவழிப் பிரபந்த வடிவங்களை எடுத்துத் தமது சமகாலப் பிரச்சனையை, வாழ்வியல் அம்சங் களைக் கூறினர். இவையாவும் ஈழத்து மரபுவழிப் பிரபந்தங்களின் சிறப்பிற்குக் காரணிகளாகின்றன.

*உசாத்துணை நூல்கள*

*புதிய வண்டு விடு தூது - மு. செல்லையா*
*நாம ராச ராசேஸ்வரி சதகம் - ச. வீரகத்தி*
*சுந்தர் பிள்ளைத்தமிழ் - சோ. சிவபாதசுந்தரம்.*
*சந்தியோகு மாயோர் அம்மானை - பேதுரு புலவர்*
*அழகம்மா திருமண அலங்கோலக் கும்மி - கல்லடி வேலுப்பிள்ளை*
*தாலபுரத்தார் கீதம் - பொன்னாலை கிருஷ்ண பிள்ளை*
*நாவலர் வெண்பா - தில்லைச்சிவன்.*

*செல்வி மாதவி சுந்தரம்பிள்ளை* B.A.Hons